**செய்தி வெளியீடு எண் : 2091** **நாள் : 21.11.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உருகொடுக்கும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

" தற்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளில் கிடைக்கும் வாய்ப்புகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 500 மாணாக்கர் மற்றும் தாட்கோ மூலம் தேர்வு செய்யப்படும் 100 ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு நிதி மேலாண்மை (**Financial Management**) காப்பீடு (**Insurance**) மற்றும் வங்கிச் சேவை (**Banking**) போன்ற நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ. 50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்."

மேற்படி அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 500 மாணாக்கர்களுக்கு வங்கி மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த தொழில் பயிற்சியினை (**Certificate in Professional Banking and Finance Programme ) Tamil Nadu APEX Skill Development Centre for BFSI Chennai-02.** நிறுவனத்தின் மூலமாக வழங்கவும், தாட்கோ மூலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 100 ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு மேற்படி பயிற்சியினை **M/s.Veranda RACE Learning Institute 5th Floor GR Complex No.81-Anna Salai, Nandanam, Chennai-600 035** என்ற பயிற்சி நிறுவனத்தின் மூலம் வழங்க நிருவாக அனுமதியும் மேற்படி பயிற்சிகளை வழங்கத் தேவைப்படும் நிதி ரூ.49,99,800/- (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. **(அரசாணை (நிலை) எண்.** 108, **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4(2)) துறை, நாள்.** 15.11.2022.

தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in